# கோலாலம்பூருக்கு பெண் மேயர் நியமனம்

கோலாலம்பூர், ஆக. 15-
கோலாலம்பூர் மேயராக மைமுனா ஷரிஃப் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தபா கூறினார். மாட்சிமை தங்கிய மாமன்னரின் ஒப்புதலுடன் இன்று முதல் அவரது நியமனம் நடப்புக்கு வருகிறது.

இதற்கு முன்னர் பினாங்கு முன்னாள் மேயராக



இருந்தவரான மைமுனா தமது நீண்ட நெடிய அனுபவத்தின் வழி இந்தப் பணியை நேர்மையுடன் செய்வார் என்று அவர் கூறினார். கோலாலம்பூரின் மேம்பாடு, அதன் சிறப்பு மற்றும் கோலாலம்பூரின் வளர்ச்சி வளப்பத்திற்கு அவர் பாடுபடு வார் என்றார் அவர். செபராங் பிறை நகரமன்ற உறுப்பினராக வும் இருந்தவரான மைமுனா இதுவரை மேயராக இருந்த கமாருல்ஸமான் மாட் சாலேக்கு பதில் இந்தப் பொறுப்பை ஏற்கிறார். அவரது பணி நேற்றோடு முடிவடைந்தது.

நகரத் திட்டம், நகர மறு வடிவமைப்பு ஆகிய துறைகளில் 39 ஆண்டு கால அனுபவம் பெற்றுள்ள மைமுனா ஐநாவிலும் 6 ஆண்டுகள் பணியாற்றியுள் ளார். மலேசிய வேல்ஸ் பல்கலைக்கழகம் அறிவியல் பல்கலைக்கழகத்தில் நகர வடிவமைப்புத் துறையில் முதுகலை பட்டம் பெற்றவர் 63 வயது மைமுனா ஆவார்.